**தலைப்பு 106 – அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 106 அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 12 ஆந் திகதி அமைச்சுக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தி முதல் 2.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளது என அவதானிக்கப்பட்டன.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்படல் வேண்டும். | 1. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காணப் படும் குறைபாடுகள் | 2.1.1 |
| | | 2. பெறுகை திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் | 2.2.1 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப் படாமை. | 2.9 |
| | | 4. மனித வள முகாமை த்துவத்தில் குறை பாடுகள் | 2.11 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. முகாமைத்துவப் பலவீனங்கள்<br>2. இணக்கமின்மைகள் | 2.5<br>2.10 |
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற்கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ள ப்பட வேண்டும். | 1. பிரதான கருமங்கள் வரையறுக்கப்படல்.<br>2. பெறுகை செயற்பாடு களை செயற்படுத்துவ திலுள்ள குறைபாடு கள் | 2.3.2<br>2.2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத் தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்ற தெனவும் | 1. முன்னேற்ற அறிக்கை களில் காணப்படும் குறைபாடுகள்<br>2. பொது மக்களுக்கான சேவைகள் நிறை வேற்றுவதில் குறை பாடுகள் | 2.3.1(இ)(ஈ)(உ)<br>2.6 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடு களில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கிடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | ஒதுக்கீடு செய்த ஏற்பாடு களை பயன்படுத்தாமை | 2.7 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர் களின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய | அரச ஊழியர்களுக்காக முற்பணக் கணக்கில் காணப்பட்ட குறைபாடு கள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| | கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனை களுக்கு உட்படுத்துதல் | | |
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடி யால் அரசிற்கு நட்டங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரை பிரமாணங்களில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் கடைபிடிக்கப் பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்த நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோ கத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிப்பதற்கும், கண்காணி க்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் தனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக் கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருத ப்படும் அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்று வதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவு படுத்துவதற்கும் நியாய ப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்து ழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த ரின் கடமை பொறுப்பாகுதல். | 1. நட்டங்களும் சேதங்களும்<br>2. நிதியுடன் தொடர்பு படுகின்ற உத்தியோக த்தர்களிடமிருந்து பிணை பணம் பெற்றிருக்கவில்லை. | 2.6<br>2.12 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நாளது வரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியின் மீதான விபரங்கள் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயற்பாடுகளுக்காக கட்டுநிதித் தேவை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த ரூபா 129.57 மில்லியன் இற்கான மீண்டுவரும் ஏற்பாடுகள் தொடர்பான தகவல்கள் முன்னேற்ற அறிக்கைகளில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மூலதன விடயங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரின் அலுவலகம் தொடர்புடைய ரூபா 6.15 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகள் மற்றும் அமைச்சுக்கான ரூபா 14 மில்லியன் ஏற்பாடுகள் தொடர்பாக விரிவான தகவல்கள் வழங்கியிருக்காததுடன் முன்னேற்ற அறிக்கையில் அந்த கொள்வனவு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தேசிய கட்டிடங்கள் ஆய்வு அமைப்பினை நிறுவுவதற்காக பாராளுமன்ற சட்டம் ஆக்கப்பட்டு பூர்த்தி செய்வதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரையும் குறிப்பிட்ட விடயம் மந்த நிலையில் நடைபெற்றது என அவதானிக்கப்பட்டது.

#### 2.1.2 செய்பணிகள் வரையறையாதல்

2017 ஜுலை 26 தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2016(11) இன் பிரகாரம் தேசிய இயற்கை அனர்த்த காப்பறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி நலன்கள் வழங்குவதற்காக அனர்த்த சேதங்கள் தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஏனைய அனைத்து விபரங்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுச் செயலாளரின் மூலம் தேசிய காப்பறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்புவதற்கு பதிலாக குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய அனைத்து விபரங்களும் உரிய மாவட்ட செயலாளரினால் நேரடியாக தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்ப வேண்டுமெனிவும் அந்த தகவல்களை அடிப்படையாக வைத்து தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் குறிப்பிட்ட காப்புறுதி நலன்கள் விடுவித்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இயற்கை அனர்த்தங்களுக்காக நட்டஈடு வழங்குதல் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நோக்கெல்லைகள் வரையறுக்கப்பட்டிருந்தது.

## 2.2 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

2017 ஆண்டிற்கான பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மற்றும் குறை நிரப்பு பாதீட்டு மதிப்பீடு ஒதுக்குவதன் மூலம் பின்வரும் செலவு விடயங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1669.1 மில்லியன் ஏற்பாடுகளில் இருந்து ரூபா 1389.6 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | செலவு விடய விபரம் | வழங்கப்பட்டிருந்த தேறிய ஒதுக்கீடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| | <u>வழங்கல்கள்</u> | | | |
| 1201 | - காகிதாகிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 5.3 | 5.2 | 0.1 |
| 1203 | - உணவு பானம் மற்றும் சீருடை | 0.08 | 0.08 | - |
| | மூலதன சொத்துக்கள் உரித்தாக்கல் | | | . |
| 2101 | - வாகனங்கள் | 615.00 | 431.6 | 183.4 |
| 2102 | - தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் | 9.56 | 9.34 | 0.22 |
| 2103 | - இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள் | 74.98 | 74.92 | 0.06 |
| 2104 | - கட்டிட நிர்மாண வேலைகள் | 964.18 | 868.46 | 95.72 |
| | மொத்தம் | 1669.10 | 1389.6 | 279.5 |

### 2.2.1 பெறுகைகள் திட்டமிடல்

அமைச்சுக்கு மீளாய்வாண்டின் போது பெறுகை செயன்முறைகளின் மூலம் வழங்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 1669.1 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 1389.6 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.1(உ) இன் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் ஆறு மாதங்களை மிகைக்காத காலப்பகுதியுள்ள வழமையாக நாளது வரை ஆக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

## 2.2.2 பெறுகை செயன்முறையினை செயற்படுத்துதல்

---

(அ) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 174.9 மில்லியன் தொகைக்கான 100 டிரக்டர் பவுஸர்கள் மற்றும் மதிப்பீட்டு கிரயம் ரூபா 105 மில்லியனுக்கான 20 லொறி பவுசர்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய அனர்த்த சலுகை சேவை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த 100 டிரக்டர் பவுசர்கள் பெறுகை தொடர்பாக அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் வழிகாட்டல் 3.2 இன் பிரகாரம் தேசிய போட்டி அடிப்படையில் விலைமனு அழைப்பு மேற்கொள்ளப்படாமல் வழிகாட்டல் 3.3 பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டு வழங்குனர்களிடம் வரையறுக்கப்பட்ட கூறுவிலை அழைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) டிரக்டர் பவுஸர்கள் பெறுகை அலுவல்களுக்காக ஆரம்பத்தில் கூறுவிலை வழங்கியிருக்காத 03 நிறுவனங்களுக்கு மீண்டும் கூறுவிலை அழைப்பு வழங்கி அதில் ஒரு நிறுவனத்தை பெறுகை அலுவல்களுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெறுகை செயன்முறை வெளிப்படையான தன்மை அற்றதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) 100 டிரக்டர் பவுஸர் வழங்கும் கட்டளை பூர்த்தி செய்ய வேண்டிய திகதி 2 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.3 இன் பிரகாரம் அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த ஒப்பந்த வேலை நிபந்தனைகளில் அதற்காக ஏற்பாடுகள் காணப்படாமையால் மேற்கூறிய நிலைமை ஏற்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(iv) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 105 மில்லியனுக்கான ரூபா 105 மில்லியன் தொகைக்கான 20 லொறி பவுஸர்கள் கொள்வனவு செய்யும் ஒப்பந்த வேலைக்கான வழங்குனர் உள்நாட்டு போட்டி அடிப்படை நடைமுறையின் பிரகாரம் விலைமனு அழைக்கப்படாமல் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(v) ஆரம்பத்தில் கொள்வனவு செய்திருந்த நிறுவனங்களிலிருந்தே மீண்டும் 25 டிரக்டர் பவுஸர்கள் கொள்வனவு செய்திருந்ததுடன் அதன் பிரகாரம் மொத்தமாக டிரக்டர் பவுஸர்கள் 125 மற்றும் லொறி பவுஸர்கள் என்பன நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்காததுடன் அவை மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கியிருந்த போதிலும் குறிப்பிட்ட டிரக்டர் பவுஸர்கள் மற்றும் லொறி பவுஸர்கள் மாவட்ட செயலாளர்களினால் முறைப்படி ஒப்புக்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 100 சுயமாக இயங்கும் மழை அளவீட்டுக் கருவிகள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் மாற்றப் பத்திரம் இலக்கம் 882 இன் மூலம் 2017 திசெம்பர் 21 திகதிய திறைசேரியின் அங்கீகாரத்தின் மீது ரூபா 53 மில்லியன் தொகை அனர்த்த முகாமைத்துவ நிலையம் செலவு விடயத்தின் மூலம் தேசிய கட்டிடங்கள் ஆய்வு அமைப்பின் செலவு விடயத்திற்கு மாற்றி இருந்த போதிலும் அந்த நிறுவனத்திற்கு ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் வளி மண்டளவியல் திணைக்களத்தினால் முறையான அங்கீகாரம் இன்றி இந்த ஏற்பாடுகளின் மூலம் சுயமாக இயங்கும் மழை அளவீட்டு கருவிகள் கொள்வனவு செய்வதற்காக பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) எவ்வாறாயினும், மழை அளவீட்டு கருவிகள், வளிமண்டலவியல் திணைக்களத்தின் களஞ்சியத்திற்கு 2017 திசெம்பர் 28 திகதி அளவிலும் கிடைத்திருக்கவில்லை. சுயமாக இயங்கும் மழை அளவீட்டுக் கருவி கொள்வனவு செய்வதற்கான செலவு ரூபா 37,052,906 தொகையாக காணப்பட்டதுடன், அதனை இந்த அமைச்சின் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த செலவில் தடுத்து வைத்தல் பணம் என ரூபா 3,705,290 தொகை பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. வழங்குனர்களுக்கு செலுத்துவதற்காக ரூபா 33,347,615 இற்கான காசோலை 2018 ஆண்டு சுமார் 4 மாத காலம் வளி மண்டளவியல் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கில் செலவினம் மற்றும் பொது வைப்புக் கணக்கின் மீதி மிகையாக காட்டப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், இதன் காரணமாக வருட இறுதியில் திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய தொகை ஒன்றினை அனுப்பாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அதே போல், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் சுயமாக இயங்கும் மழை அளவைக் கருவி கொள்வனவு செய்வதற்காக வழங்கியிருந்த ஏற்பாடுகளில் இருந்து ரூபா 15,947,094 தொகை சேமிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(இ) தலைமை அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் மறுசீரமைப்பு அலுவல்களின் தன்மை மற்றும் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமல் ரூபா 9,880,000 தேசிய கட்டிடங்கள் ஆய்வு அமைப்பிற்கு 2017 திசெம்பர் 27 ஆம் திகதி செலுத்தியிருந்தது.

(ஈ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 6.3.6 மற்றும் 6.3.7 இன் பிரகாரம் விலைமனு திறத்தல் அலுவல்கள் தொடர்பாக உரிய படிவத்தில் அிறக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் ரூபா 989,000 இற்கான 2 நிழல் பிரதி இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் பெறுகையில் அவ்வாறு செய்திருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்**

2016 மார்ச் 31 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 05/2016 இல் பந்தி 3.1.6 இன் பிரகாரம் பண்டக் கணிப்பீட்டு சபை அறிக்கை 2018 மார்ச் 17 திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வறிக்கைகள் 2018 மே 25 திகதி அன்றே அனுப்பப்பட்டிருந்தது.

**2.4 இழப்புக்கள் தொடர்பான பொறுப்பு**

இந்துனேசிய அரசில் இருந்து 2017 ஆண்டின் போது வரட்சி உதவியாக கிடைத்திருந்த 5000 மெற்றிக் தொன் அரிசி மனித நுகர்விற்கு பொருத்தமற்றதாகியுள்ள காரணத்தினால் மிருக உணவு உற்பத்திற்காக விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொள்வனவு செய்வதற்காக அணுகிய உடன்படிக்கை குறிப்பிட்ட கொள்வனவு நிறுவனத்தினால் மீறி இருந்த போதிலும் ரூபா 22.57 மில்லியன் தொகைக்கான செயலாற்றுகை பாதுகாப்பு பிணை முறியின் பெறுமதியில் 50 சதவீதத்தை உடன்படிக்கையை முறித்த கொள்வனவு நிறுவனத்திற்கு செலுத்தியிருந்தது. மிருக உணவு உற்பத்திக்காக விற்பனை செய்யப்பட்டிருந்த அரிசி மிருக உணவு உற்பத்திக்காவே பயன்படுத்துகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக தொடர் நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள்ளப்படாமையினால் அந்த அரிசி இருப்பு மனித நுகர்வுக்காக சந்தைக்கு வரக்கூடிய ஆபத்து நிலை ஒன்று காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

## 2.5 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனர்த்த உதவி சேவை நிலையத்தினால் பாய்கள் கொள்வனவு செய்யும் போது ரூபா 1.10 மில்லியன் தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்பாராத அனர்த்தமொன்றின் போது கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கடுவன மற்றும் வலஸ்முல்ல பிரதேச செயலகங்களினால் முறையே மண்சரிவு உயர் ஆபத்து வலயங்களில் வசிக்கும் குடும்பங்களுக்காக நிரந்தர வீடுகள் நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்த ஏற்பாடுகளில் 28 சதவீதம் மற்றும் 38 சதவீதம் போன்ற குறைந்த அளவுகளில் நலன்பெறுவோருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஜூன் 25 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வெள்ளம் மண்சரிவு மற்றும் உயர் ஆபத்துகள் காரணமாக தமது வதிவிடங்களில் இருந்து அகற்றப்பட்ட குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் அடங்கியிருக்காத காலி மாவட்டத்தில் அந்த அலுவல்களுக்காக ரூபா 119.2 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

(உ) வீடமைப்பு வரைபுகளுக்காக தேசிய கட்டிடங்கள் ஆய்வு அமைப்பு மற்றும் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தை பெறுவதற்கு முன்னர் எல்பிட்டிய மற்றும் நாகொட பிராந்திய அலுவலகங்களினால் முதலாவது தவணைப் பணமாக ரூபா 200,000 வீதம் 27 நலன்பெறுவோருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆபத்து நிலைமையான காணிகள் மற்றும் அரசாங்கத்தினால் மீள் குடியேற்றுவதற்காக தெரிவு செய்திருந்த காணிகளுக்கு தேசிய கட்டிடங்கள் ஆய்வு அமைப்பின் விதப்புரை வழங்குவதில் காணப்பட்ட தாமதத்தின் காரணமாக ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் முன்னேற்றமும் அறை குறையாகியிருந்தது. மற்றும் காலி மாவட்ட செயலாளருக்கு வழங்கியிருந்த நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு மிகவும் பலவீனமான முன்னேற்றமொன்றினை காட்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஊ) வெள்ளம் மண்சரிவு மற்றும் எதிர்பார்த்த ஆபத்து காரணமாக தமது வதிவிடங்களில் இருந்து வெளியேற்றிய குடும்பங்களை மீள்குடியேற்றும் போது இரத்தினபுரி மாவட்ட செயலகத்திற்கு வழங்கியிருந்த ஏற்பாடுகளில் ரூபா 19 மில்லியன் மாவட்ட செயலகத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(எ) பலாங்கொடை, கஹவத்த, கிரிஎல்ல ஆகிய 03 பிரதேச செயலகங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளில் செலவு ஏதும் மேற்கொண்டிருக்காததுடன் 05 பிரதேச செயலகங்களுக்கு வழங்கியிருந்த ஏற்பாடுகளில் 10 சதவீதமான மிகவும் குறைந்த பெறுமதியே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) நலன்பெறுவோர் ஒருவருக்கு சொந்தமான காணி ஒன்றில் அரச நிதி உதவியுடன் வீடு ஒன்று நிர்மாணிப்பதற்காக அயகம பிரதேச செயலக வட்டாரத்தில் நலன்பெறுவோர் இருவருக்கு மாத்திரம் 2017 திசெம்பர் 06 திகதி முதல் கொடுப்பனவு செய்திருந்ததுடன் தெரிவு செய்யப்பட்டிருந்த ஏனைய 85 நலன்பெறுவோருக்கும் தவணைப் பணம் ஏதும் செலுத்தியிருக்கவில்லை. மேலும் வீடு ஒன்றுடனான காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் 13 பிரதேச செயலக பிரிவுகளில் 116 நலன்பெறுவோர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 06 திகதி அளவில் 112 நலன்பெறுவோருக்கு தவணைப் பணம் ஏதும் செலுத்தியிருக்கிவல்லை.

(ஐ) இரத்தினபுரி மாவட்டத்தில் 12 பிரதேச செயலக பிரிவுகளில் காணிகள் கொள்வனவு செய்வதற்காக மற்றும் வீடு நிர்மாணிப்பதற்காக 362 நலன்பெறுவோருக்கு நிதி உதவி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் நலன்பெறுவோர் 323 பேருக்கு காணி கொள்வனவு செய்வதற்கு 358 நலன்பெறுவோருக்கு வீடுகள் நிர்மாணிப்பதற்கும் நிதி உதவி வழங்கியிருக்கவில்லை.

(ஒ) அரச காணி ஒன்றில் அரச நிதி உதவியுடன் வீடு நிர்மாணிப்பதற்கு இரத்தினபுரி மாவட்டத்தில் தெரிவு செய்திருந்த 878 நலன்பெறுவோருக்காக நிதி உதவி ஏதும் செலுத்தியிருக்கவில்லை.

(ஓ) 2017 ஆண்டின் போது கடும்காற்று மற்றும் மண் சரிவு காரணமாக சேதமடைந்த 14 வீடுகளின் உரிமையாளர்களுக்காக முற்பணமொன்றாக கொடுப்பனவு செய்வதற்காக அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு ரூபா 140,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 75,000 தொகை 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் கொடுப்பனவு செய்திருக்காததுடன் அப்பணம் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஔ) வலப்பனை பிரதேச செயலகத்திற்கு 2016 ஆண்டிற்கு முன்னர் அனர்த்தத்திற்கு ஆளாகியவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கிடைத்திருந்த பண்டங்களில் பகிரப்படாமல் மீதியாக இருந்த பண்டங்கள் களஞ்சியத்தில் முறைசாரா விதமாக குவிக்கப்பட்டு காணப்பட்டது. மேலும், அந்த பண்டங்கள் அழிவடையும் நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் பெறுமதியை இனங்காணக் கூடிய விதத்தில் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டின் போது ஹங்குரங்கெத பிரதேச செயலாளர் பிரிவில் பல்வேறு அனர்த்தங்களுக்கு ஆளாகிய நபர்களினால் தமக்கு ஏற்பட்டிருந்த அனர்த்தங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 52 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 42 கோரிக்கைள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அனர்த்த நிகழ்வுகள் பதிவு செய்யும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.6 பொது மக்களுக்கான சேவைகள் நிறைவேற்றுதல்**

2016 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த அனர்த்த நிலைமைகளின் காரணமாக துரதிஷ்டத்திற்கு ஆளாகிய பொது மக்களுக்கு சலுகைகள் வழங்குவதற்காக பொதுமக்கள் உதவி சேகரிப்பதற்காக இலங்கை வங்கியில் வங்கிக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த கணக்கில் ரூபா 132.22 மில்லியன் இற்கான மீதி ஒன்று காணப்பட்டதுடன் துர்அதிஷ்டத்திற்கு உள்ளாகிய பொதுமக்களுக்கு உதவி ஏதும் வழங்கியிருக்காமையால் அந்த வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.7 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 551 | 467 | 84 | 15 |
| | மூலதன | 1,231 | 1,054 | 177 | 14 |
| | **மொத்தம்** | **1,782** | **1,521** | **261** | **15** |
| 2014 | மீண்டுவரும் | 985 | 966 | 19 | 2 |
| | மூலதன | 3,271 | 3,065 | 206 | 6 |
| | **மொத்தம்** | **4,256** | **4,031** | **225** | **5** |
| 2015 | மீண்டுவரும் | 1,293 | 733 | 560 | 43 |
| | மூலதன | 2,209 | 1,752 | 457 | 21 |
| | **மொத்தம்** | **3,502** | **2,485** | **1,017** | **29** |
| 2016 | மீண்டுவரும் | 741 | 661 | 80 | 11 |
| | மூலதன | 4,648 | 3,478 | 1,170 | 25 |
| | **மொத்தம்** | **5,389** | **4,139** | **1,250** | **23** |
| 2017 | மீண்டுவரும் | 8,898 | 6,974 | 1,924 | 22 |
| | மூலதன | 7,540 | 5,095 | 2,445 | 32 |
| | **மொத்தம்** | **16,438** | **12,069** | **4,369** | **27** |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 50,793,500 மொத்த தேறிய ஏற்பாடுகளில் எதனையும் பயன்படுத்தாமல் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 12 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்திருந்தமையால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயத்திற்கான தேறிய ஏற்பாடுகளில் 39 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 10601 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 20.00 | 18.99 | 4.50 | 7.62 | 42.00 | 28.65 |

இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணைக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 344,435 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதி 01 வருடம் 6 மாதங்கள் முதல் 3 வருடங்கள் 06 மாதங்கள் வரை காலவீச்சு ஒன்று முதல் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக அமைச்சுக்கு முடியாதிருந்தது.

### 2.9 பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை/ நிதிப் பிரமாணம் 502(2) இன் 11 ஆம் பிண்ணிணைப்பின் பிரகாரம் | நாளது வரை ஆக்கி யிருக்கவில்லை. |
| சேதங்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பொறுப்புக்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பிணை வைப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு | நிதிப் பிரமாணம் 1645(அ) | நாளது வரை ஆக்கியிருக்க வில்லை. |

**2.10 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (i) | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவச் சட்டம் | அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அடிப்படை கொள்கைசார் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உடைய அனர்த்த முகாமைத்தவ சபை 2017 ஆண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |
| (ii) | - மேற்படி - | தேசிய அனர்த்த சந்தர்ப்பமொன்றின் போது ஆட்கள் மற்றும் ஆதனங்களை காப்பாற்றிக் கொள்ளல் தொடர்பாக தேசிய கொள்கைகள் தயாரித்தலுக்கான தேசிய அவசர சந்தர்ப்ப செயற்பாட்டுத் திட்டம் செயற்படுத்தி இருக்கவில்லை. |

**2.11 மனிதவள முகாமைத்துவம்**

**இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேலே 2.1 இல் குறிப்பிட்டுள்ள செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளுக்குரிய வேதன செலவினத் தொகுதிக்காக ரூபா 235.40 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 18 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 03 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 445 | 400 | 45 |
| (iv) | ஆரம்ப நிலை | 47 | 41 | 06 |
| | மொத்தம் | 521 | 462 | 59 |

## 2.12 அரச உத்தியோகத்தர் பிணை வைத்தல்

அரசாங்க பணம், வருமானம், முத்திரை அல்லது பண்டங்களுக்கு பொறுப்பாக இருந்தல் அவ்வாறு இன்றேல் அரச பணம் வினியோகித்தல் அல்லது முத்திரை அல்லது பண்டங்கள் வழங்குதல் தொடர்பாக நிருவாக ரீதியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய அல்லது அதிகாரமளித்தளின் கீழ் அந்த அலுவல்கள் சாட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், அரச கணக்கிற்கு உரிய உறுதிச்சான்றுகள் சான்றுபடுத்தும் காசோலைகள் கையொப்பமிடும் ஆட்களும், தமது கடமை அலுவல்களை நேர்மையுடன் நிறைவேற்றுவதற்காக 612 அதிகாரம் ஆகிய அரச ஊழியர்களுக்கான பிணை கட்டளை சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டுமெனினும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணை வைப்புகள் பேணப்படுவதாக அவதானிக்கப்படவில்லை.